(ஈ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31- தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 543,69,69,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-5-2010) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

74. 2008-2009 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)] 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

[2010 மே 3

75. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. மானியக் கோரிக்கை எண் 27 - தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

119. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2009-2010. (தமிழ், ஆங்கிலம்)

120. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

121. மானியக் கோரிக்கை எண் 31 - தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

122. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2010-2011. (தமிழ்)

123. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த புத்தகம். (தமிழ்)

124. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்த விளக்கக் கையேடு, 2010. (தமிழ்)